Written by - ஸ்ரீ ராம் விக்னேஷ் (தமிழகத்து நெல்லை - வீரவநல்லூர்) -
Friday, 21 June 2019 07:11 - Last Updated Friday, 21 June 2019 07:13



பதியிழந்து பலமிழந்து,
படைத்துவிட்ட நாடிழந்து,
கதியிழந்து வருவரல்ல அகதி! - ஆங்கே
விதியிருந்தும் கதியிருந்தும்,
விபரமற்றோர் தமைமிதிக்கும்,
வீணர்களே உள்ளூரின் அகதி!

நெற்றிதன்னில் வழிகின்ற,
நீள்வியர்வை நிலஞ்சிந்த,
கஷ்டமுற்று உழைப்பவனின் கூலி! - அதை
பத்தினுக்கு எட்டாக்கி,
பகற்கொள்ளை அடிப்பவரே,
சொத்துசுகம் வைத்திருந்தும் அகதி!

விற்றுவிடும் தானியங்கள்,
விலையேறிப் போகையிலே,
சுற்றியதைச் சுருட்டிவைக்கும் தகுதி! - அதில்
பெற்றுவிடும் லாபமெண்ணிப்,
பிறர்வயிற்றை நோகவைக்கும்,
அற்பர்களே இதயமில்லா அகதி!

நலிந்துவிட்டோர்க்(கு) உதவித்தொகை,
நல்லபடி அரசுதர,
நாணமின்றித் தின்னுமதி காரி! - அவன்
மெலிந்தே வலிந்திரக்கும்,
மேனியர்க்கும் கேவலமாய்,

நலிந்துவிட்ட நோயான அகதி!

வீட்டிலுள்ளோர் பசியிருக்க,
வெறிபிடித்துக் கூத்தியரின்,
பாட்டினிலே தம்மைமறக்கும் தகுதி! - அதை
நாட்டமுடன் செய்துவிட்டு,
நல்லவர் வரிசையிலே,
நாடும் வெள்ளை வேட்டியரும் அகதி!

பண்படுத்தும் ஆயுதமாய்,
பலமதங்கள் தோன்றினும்,
பக்குவத்தை அடையாத பகுதி! - இன்னும்
கண்துடைப்புச் சாஸ்த்திரத்தை,
காரணமாய்க் காட்டிப்பலி,
காண்பவரே ஞானமற்ற அகதி!

தஞ்சமென்று துணைகேட்டு,
தளர்ந்துவரும் அகதியரை,
தாங்கும் ஐயா பல்வேறு இதயம்! - ஆனால்,
அஞ்சுவகைப் பாதகமும்,
அச்சுவெல்ல மாக உண்ணும்,
நஞ்சருக்கு யார்கொடுப்பார் எதையும்...?